
# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)




பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா

ம. வித்யா

**தமிழியல் ஆய்வுத் தடங்கள்**
**(தேசிய கருத்தரங்கக் கட்டுரைகள்)**

முதல் பதிப்பு : மார்ச் 2016

உரிமை : பதிப்பாசிரியர்கள்

பக்கங்கள் : 888

வெளியீடு : **போதிவனம்**
அகமது வணிக வளாகம், தரைத்தளம்,
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
அலைபேசி: +91 - 9841450437
bodhivanam@gmail.com

நூல் வடிவமைப்பு : கே.எஸ். கருணா பிரசாத்

விலை : **600**

**Thzmizhiyal Aaivu Thadangal**
**(Research papers presented in National Seminar)**

First Edition : March 2016

Copyright : Editors

Pages : 888

Publisher : **Bodhivanam**
Ahmed Complex Ground Floor,
12/293, Royapettah High Road,
Royapettah, Chennai-600 014.
Mobile : +91 - 9841450437

Design : K.S. Karuna Prasad

Price : **600**

ISBN No. : 978-93-80690-36-0

| | | |
|---|---|---|
| 109. முத்துச்செல்வி.சி | புதுக்கவிதையில் இயக்கச் சிந்தனைகள் | 665 |
| 110. முருகானந்தம்.இரா | கோட்பாட்டு நோக்கில் தலித் இலக்கியம் | 673 |
| 111. மேனகா.ஜெ | பரிபாடலில் – கணிதம் | 686 |
| 112. மோகன்.கோ | தமிழில் தலித்திய ஆய்வுக்கான முன்னெடுப்புகள் | 691 |
| 113. மோகன்காந்தி.க | ஆய்வாளர்கள் பார்வையில் நன்னனும் நன்னன் சேய் நன்னனும் | 698 |
| 114. மோகனா.இரா | சமூக இயக்கங்களின் ஊடாகப் பெண்ணியப் பார்வையில் மண்மகன் | 703 |
| 115. யாழினி.கோ | சங்க இலக்கியத்தில் "ஆதிமந்தி" | 709 |
| 116. ராஜா.பொ | பதிப்பு வெளியில் ஆய்வுகள்: முன்னெடுக்காமையும் முன்னிறுத்தாமையும் | 714 |
| 117. ரேணுகா.நா | தமிழியல் ஆய்வுலகில் ச.வையாபுரிப்பிள்ளை | 718 |
| 118. ரூபா.ஆ | கார்த்திகேசு சிவத்தம்பியின் மொழிக் கற்பித்தல் குறித்த ஆய்வு முறையும் நடைமுறைச் சிக்கல்களும் | 724 |
| 119. லட்சுமிபிரியா.மா | நவீனத் தமிழ்இலக்கிய கோட்பாடு இயக்கங்கள் | 729 |
| 120. லதா.க | திறனாய்வாளர்களும் சிலப்பதிகாரமும் | 734 |
| 121. லயோலா சூலியட் மேரி.பா | வர்க்க முரண்பாடு | 738 |

# திறனாய்வாளர்களும் சிலப்பதிகாரமும்

**முனைவர் கு. லதா.**
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

அறிவை விரிவு செய்து அகண்டமாக்கி விசாலப்பார்வையால் உலகை விழுங்க, உலகைக் குறித்த நம் எண்ணங்கள் மாறும். புதிய திசைகள் கண்ணில் தோன்றும். புதிய தடங்கள் வசப்படும். இது போல இலக்கியங்களை நோக்கினால் மொழிக்கு வளம் சேர்க்கும் பல ஆய்வுப்பார்வைகள் உருவாகும். எவ்வகை ஆய்வுப்பார்வைக்கும் இடமளிப்பது முதன்மைக் காப்பியமும் முத்தமிழ்க் காப்பியமும் ஆன சிலப்பதிகாரம். தன்னிகரற்ற இக்காப்பியம், அறிஞர்களின் பார்வையில் பலவாறு விரிந்துள்ளது. 2004-இல் சிலம்பு குறித்து இருபத்தியிரண்டு திறனாய்வாளர்களால் எழுதப்பட்ட திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு 'சிலப்பதிகாரம் ஆய்வுக் கோவை' என்னும் நூல். இந்நூல் சிலம்பு என்னும் கடலுக்குள் மூழ்கி எடுத்துக் கோர்க்கப்பட்ட நவமணிகளின் குவியல். எத்தகு ஆய்விற்கும் சிலம்பு இடம் தரும் என்பதற்குச் சான்றாக விளங்கும் இந்நூலில் பார்க்கப்பட்ட பல்வேறு நோக்குகளை இக்கட்டுரை ஆய்கிறது.

மனிதன் தன்னைப் பிறருடன் ஒப்பிட்டு நோக்கும்போது தன்னுடைய குறைகளைக் களைந்து, நிறைகளைக் கூட்டிக்கொள்ள முடியும். இலக்கியங்களும் அவ்வாறே, "தமிழர்களின் தேசிய வளர்ச்சி, பண்பாட்டு முதிர்ச்சி, தேசிய இனஎழுச்சி, இலக்கிய நெறி வளர்ச்சி ஆகியவற்றின் குறியீடாக விளங்கும் சிலப்பதிகாரம் உலக இலக்கியங் களுடன் ஒப்பிடும் நிலையில் உள்ளது" எனக் குறிப்பிடுகிறார் கிரேக்க நாடகங்களுடன் சிலம்பை ஒப்பிடும் திறனாய்வாளர் முனைவர். கா. செல்லப்பன். (சிலப்பதிகாரம், ஆய்வுக்கோவை, ப. 21) சிலம்புக் காப்பியத்தின் ஆழ அகலங்களை நோக்க, அது உலக மொழி இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கத்தக்கது என்ற செய்தியையும் சுட்டிச் செல்கிறார் அவர். "சிலப்பதிகாரத்தை ஷேக்ஸ்பியர் நாடகங்களுடன் ஒப்பிட்டால் அதன் நாடகப்பாங்கும், மனித மையமும் தெளிவாகும். அதைத் தாந்தேயின் 'தெய்வீக இன்ப நாடகத்தோடு ஒப்பிட்டால், அங்கும் மனித உயர்வு, மீட்சி, மூன்று இடக்கூறுகள் மையமாக்கப் பட்டிருப்பதையும், பியட்ரிஸ் என்ற பெண்ணின் தோற்றத்தில் இறைமை நிழலாடுவதையும் காணலாம். ஆனால் மேற்கத்திய இலக்கியங்களின் மூலச்சுரங்கமான கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்